<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (MACT) கிருஷ்ணகிரி</u>

**<u>M.C.O.P No.431/2024, Date: 09.02.2026</u>**

The Oaths Act 1969, Act No.44/1969ன் விதிமுறைகளின் படி 09.02.2026 நாளாகிய இன்று Tmt.M.Jayanthi,M.A.,M.L., சிறப்பு சார்பு நீதிபதி (MACT) அவர்கள் முன்னிலையில் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : அக்க்ஷய் | **வயது** | : |
| **தந்தை பெயர்** | : | **மாவட்டம்** | : |
| **வேலை** | : | **கிராமம்** | : |
| **அலைபேசி எண்.** | : | | |

**ம.சா.1**

<u>முதல் விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)</u>

நான் மனுவின் மனுதாரர். பிரமாண வாக்குமூலம் எனது தரப்பில் **(e–filling)** மூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.33** வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை என்று உறுதியளிக்கிறேன். மனுப்படி உத்தரவிடவேண்டுகிறேன். **ம.சா.ஆ.3, ம.சா.ஆ.4**, **ம.சா.ஆ.16** முதல் **ம.சா.ஆ.19**–மருத்துவ விடுவிப்பு சான்றுகள் அசல், **ம.சா.ஆ.2**1–CT abdominala orta and Lower LIMBS அசல், **ம.சா.ஆ.22**–Xray அசல், **ம.சா.ஆ.23–** எதிர்கால மருத்துவ செலவு அசல், (ஆட்சேபனையுடன்) **ம.சா.ஆ.24**–இருசக்கர வாகன நஷ்ட செலவு ரூ.90,000/–அசல், (ஆட்சேபனையுடன்) **ம.சா.ஆ.26**–மருத்துவ பில்கள் ரூ.3,33,870.56/–அசல், (ஆட்சேபனையுடன்) **ம.சா.ஆ.27**–மனுதாரரின் போக்குவரத்து பில்கள் அசல் ரூ.25,686.13/– அசல், (ஆட்சேபனையுடன்) **ம.சா.ஆ.28**–மனுதாரர் தங்கும் இடத்திற்கான பில்கள் ரூ.95,000/–அசல், (ஆட்சேபனையுடன்) ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளேன்.

<u>குறிப்பு:</u> சாட்சி ஊன்றுகோல் உதவியுடன் அழைத்துவரப்பட்டு அமர்ந்த நிலையில் சாட்சியம் அளித்தார்.

<u>குறுக்கு விசாரணை :- (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

எனக்கு சொந்த ஊர் மகராஷ்டிரா மாநிலம் சோலாப்பூர் ஆகும். தற்போது குஜராத் மாநிலம் பூனே-யில் உள்ளேன். நான் அங்குதான் வீட்டில் இருந்தவாறு வேலை செய்கிறேன். இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவற்கு ஆள்வரை இல்லை என்றால் விபத்து இம்மாவட்டத்திற்குள் நடந்ததால் நான் இங்கு தாக்கல் செய்துள்ளேன். விபத்து 02.03.2024 அன்று பெங்களூரிலிருந்து திருவண்ணாமலை கோவிலுக்கு சென்றபோது ஏற்பட்டது என்றால் சரிதான். பெங்களூருக்கும், திருவண்ணாமலைக்கும் 260 கி.மீ என்றால் சரிதான். நான் தொடர்ச்சியாக பெங்களூரிலிருந்து ஓய்வின்றி இருசக்கர வாகனத்தில் வந்ததால் விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும் காரணம் என்றால் இல்லை. விபத்து சமயம் என் பின்னால் அஜய் என்பவர் அமர்ந்திருந்தார். அவருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அவர் விபத்து குறித்து புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக என் நண்பர் திருமால் என்பவர் மறுநாள் புகார் அளித்தார். அவர் விபத்து குறித்து கேள்வியுற்றவர் என்றால் சரிதான். அவர் என்னுடன் பணிபுரிபவர் ஆவார். அவர் என் நண்பவர் என்பதால் என்னுடைய கவனக்குறைவை மறைத்து கார் ஓட்டுநருக்கு எதிராக தவறாக புகார் அளித்துள்ளார் என்றால் இல்லை. முதலுதவி சிகிச்சை ஊத்தங்கரை அரச மருத்துவமனையிலும், மேல் சிகிச்சை பெங்களூர் பகவான் மருத்துவமனையிலும் எடுத்துக்கொண்டேன். நான் வேலை செய்யும் நிறுவனம் கார்பரேட் என்பதால் என்னுடைய மருத்துவ செலவை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்றால் ஒரு பகுதி ஏற்றுக்கொண்டார்கள். மீதியை நான் செலுத்தியுள்ளேன். நான் Go-digit காப்பீட்டு நிறுவனத்தில் இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு இழப்பீடு தேய்மானம்

போக ரூ.90,000/-த்தை நான் பெற்றுள்ளேன் என்றால சரிதான். அநத வாகனத்தின் மதிப்பே ரூ.90,000ம் என்பதால் invoice ரூ.1,60,000/- கோர இயலாது என்றால் சரியல்ல. நான் சாலையின் மத்தியின் நடுவே சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களுக்குண்டான மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டது என்பதற்கு என்னுடைய சம்பள பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்திற்கு பின்னிட்டு மே மாதம் இறுதியில் பணிக்கு சேர்த்தாக ஞபாகம் தேதி சரியாக ஞபாகமில்லை. சுமார் 35 நாட்கள் மட்டுமே என்னுடைய மருத்துவ விடுவிப்பு மற்றும் தற்செயல் விடுப்பு கழித்துக்கொள்ளப்பட்டது மீதி நாட்கள் சம்பளம் இல்லாத விடுப்பில் இருந்தேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போதைய சம்பளம் பிடித்தம் போக ரூ.77,800/- ஆகும். மொத்த சம்பளம் ரூ.84,000/- ஆகும். எனது வலது கால் பாதத்தில் ஏற்பட்ட காயத்தை தவிற மற்ற காயங்கள் குணமடைந்துவிட்டது என்றால் தவறு. முழங்கால் முட்டிக்கு கீழ் தசை இறுக்கம் மற்றும் எலும்பு இறுக்கம் உள்ளது. விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் எனது வேலை பாதிப்படையவில்லை என்றால் தவறு. விபத்திற்கு பிறகு தொடர்ந்து 2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் மனிதாபிமான அடிப்படையில் எனது நிறுவனம் வீட்டிலிருந்தே பணிபுரிய அனுமதித்துள்ளது. நான் பி.பி.ஏ., பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் அமர்ந்த நிலையிலேயே வேலை செய்யமுடியும் என்றாலும், field work செய்ய வெளியில் செல்ல தேவையில்லை என்றாலும், எனவே விபத்தினால எனக்கு உறுப்பு இயக்க செயல்பாடு குறைவு இல்லை என்றால் தவறு. என்னால் ஊன்றுகோல் மற்றும் மருத்துவரால் அறிவுறுத்தப்பட்ட காலனி உதவியின்றி தன்னிச்சையாக நடக்க இயலாது. வீட்டு வாடகை ஒப்பந்தம் தாக்கல் செய்யாததால் ம.சா.ஆ.28 ஏற்கத்தக்கததல்ல என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.23 எதிர்கால மருத்துவ தேவைக்கானது என்றால் சரிதான். எனக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றாலும, எனக்கு எதிர்காலத்தில் நரம்பு உணர்வு வரும் என்பதற்காக ம.சா.ஆ.23 தவறாக வழங்கப்பட்டுள்ளது என்பதால் அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் தற்போது பாதத்தில் தொடு உணர்வு இல்லை. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தவறு. நான் பல்வேறு தலைப்புகளில் கேரியுள்ள இழப்பீட்டிற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை.

M JAYANTHI
Digitally signed by M JAYANTHI

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்(MACT),
கிருஷ்ணகிரி.